**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1. அபிப்பிராயம்

---

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் சட்ட உதவி ஆணைக்குழு 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சட்ட உதவி ஆணைக்குழுவின் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகையில் சொத்துக்களின் பாவனையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்படுகையில் சகல சொத்துக்களும் 5% அளவில் குறைத்தெழுதிய பெறுமதியில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் காசு மற்றும் காசுக்குச் சமனான மீதி ரூபா 11,591,896 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இம் மீதியில் ரூபா 750,000 தொகையான நிலையான வைப்பு மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் | இணங்காமைகள் |
|---|---|
| தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயம் மற்றும் 2010 யூன் 07 ஆம் திகதிய 9/2010 ஆம் இலக்க அரச நிருவாகச் சுற்றறிக்கை | களுத்துறை சட்ட உத்தியோகத்தரின் போக்குவரத்துச் செலவினத்திற்காக கொடுப்பனவு 1 கிலோ மீற்றருக்காக ரூபா 15 வீதத்தில் நிறுவகத்தால் செலுத்தியிருந்ததுடன் செலுத்தப்பட வேண்டிய எல்லைக்கு மேலாக மைல் கூலிக்கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் காரணமாக 2010 பெப்ரவரி மாதம் முதல் 2010 ஆகஸ்ட் வரை ரூபா 21,130 தொகையான மைல் கூலிக் கொடுப்பனவாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவினது நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகள் ரூபா 6,423,543 மிகையானதுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டினது மிகை ரூபா 4,622,275 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 1,801,268 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது. அரசாங்கத்தின் மானியமும் பதிவுக்கட்டணமும் ரூபா 10,954,772 தொகையால் அதிகரித்தமையும் நிர்வாக மற்றும் நிதிச் செலவினமும் ரூபா 9,153,504 ஆல் அதிகரித்தமையும் இதற்காகப் பெருமளவில் தாக்கமளித்திருந்தன.

**2.2 செயற்திறன்**

---------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவும் அதன் பிராந்திய நிலையங்களினூடாக 3252 வழக்கு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது தலைமைக் காரியாலயத்தில் இருந்தும் ஏனைய 57 நிலையங்களினூடாக 39001 நபர்களுக்காக சட்ட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது.

**2.3 கூட்டுத்திட்டமும் செயற்பாட்டுத்திட்டமும்**

----------------------------------------------------------------

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்திட்டமும் செயற்பாட்டுத்திட்டமும் தயாரிக்கப்பட்டு அதன் பிரதி உரிய ஆண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இவ் அறிக்கை வழங்கப்படும் தினத்திலும் அவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---------------------------------------------------------

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிலையான சொத்துக்கள்